# இரசாயன பொறியியல் துறையில் பட்டம் பெற்ற இரட்டையர்

சூரியகுமார் முருகன்,
படம்: ஆர்.பார்த்திபன்

கோலாலம்பூர், ஆக. 20-

உயர்கல்விக் கூடங்களில் மலேசிய இந்திய மாணவர்கள் அதிகம் தேர்ந்தெடுக்காத துறையான ரசாயன பொறியியல் துறையில் அகல்யா, அனுசியா (வயது 23) இரட்டையர் பட்டம் பெற்றனர்.

உலகம் முழுவதும் இத்துறைச் சார்ந்த வேலை வாய்ப்புகள் பெருகி விட்டன. ஆனால் இந்திய மாணவர்கள் ஏன் இந்தத் துறைகளை தேர்ந்தெடுப்பதில்லை என்பது தெரியவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

எண்ணெய் எரிவாயு, உணவுத் துறை ஆகியவற்றில் இக்கல்விக்கு நல்ல மரியாதை உள்ளது. தரமான வேலைகளுக்கு இக்கல்வி பெரும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்திய மாணவர்கள் இத்துறையைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும்.

இத்துறையில் பயில எஸ்பிஎம் தேர்வில் இயற்பியல், கணிதம், ரசாயனத் துறை ஆகிய பாடங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்தப் பாடங்களில் மாணவர்கள் சிறந்து விளங்கினால் ரசாயன பொறியியல் துறையில் உயர்கல்வி கற்கலாம் என்று நேற்று செராஸ் யூசிஎஸ்ஐ பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற இரட்டையர் இவ்வாறு கூறினர்.



இவ்விழா 18,19 என இரு தினங்களுக்கு நடைபெற்றது. இதில் 2,445 மாணவர்கள் பல்வேறு துறைகளில் பட்டம் பெற்றனர். இதில் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டான்ஸ்ரீ பங்ளிமா டாக்டர் அப்துல் ரஹ்மான் அர்ஷாட், துணைவேந்தரும் பல்கலைக்கழகத்தின் தலைவருமான தலைமை பேராசிரியர் டத்தோ டாக்டர் காலிட் யூசோப் ஆகியோர் மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கினர்.